கொசு ஒழிப்பதற்கு என்று தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி இப்பொழுது அங்கே ஆண்டொன்றுக்கு 51,000 பேர்தான் மலேரியாவினால் தாக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அதுபோன்ற ஒரு அமைப்பை நம்முடைய சென்னையிலே ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கூவத்தைப் பொறுத்தவரை கழிவுநீர் வந்து கலக்காமல் இருப்பதற்கு ஒரு தனித் திட்டத்தை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அது முழுமையாக ஆய்வுபெற்ற பின்புதான் அந்த நடவடிக்கையை எடுக்க முடியும். இதற்குத் தனியாக ஒரு அமைப்பு என்று சொன்னார்கள். வாரியம் போலக் கேட்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை, இருக்கிற அமைப்பையே வைத்து கொசுக்களை ஒழித்து விடலாம் என்ற முயற்சியைத்தான் இந்த அரசாங்கம் இப்போது மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10—35

(ஆ) ஆண்டிமடம் தொகுதி பெரியாத்துக்குறிச்சியிலுள்ள ஆதி திராவிட மக்களின் இடுகாடு ஆக்கிரமிக்கப் பெற்றுள்ளது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு,

திரு. ஆர். தங்கராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். தங்கராஜ், நிகழ்ச்சி நிரலிலே இருக்கிற குறிப்பை அப்படியே படியுங்கள். ஏற்கெனவே, நீங்கள் சொன்னது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, நிகழ்ச்சி நிரலில் இருப்பதை அப்படியே படியுங்கள்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப் பெற்றது,

1992 ஏப்ரல் 11

<u>திரு. ஆர். தங்கராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" ஆண்டிமடம் தொகுதி பெரியாத்துக்குறிச்சியிலுள்ள ஆதிதிராவிட மக்களின் இடுகாட்டினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து " மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

<u>விவர அறிக்கை,</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் கோட்டம், ஆண்டிமடம் தொகுதி பெரியாத்துக்குறிச்சி கிராம சர்வே எண் 194/1-இல் 1.46.0 ஹெக்டேர் காட்டுக்குளம் புறம்போக்கு நிலத்தில் 0.40 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர்களால் மயானமாகத் தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் புல எண் குளம் புறம்போக்கு எனப் பாகுபாடு செய்யப்பட்டிருப்பினும், தலத்தில் குளம் ஏதும் இல்லை. மயான உபயோகம் உள்ள இடம், 0.40 ஏக்கர் போக, பாக்கியுள்ள குளம் புறம்போக்கு நிலத்தை ஊர்ப்பொதுவில் ஊர்க்கோவில் நன்மைக்காக கீழ்க்கண்ட நபர்களுக்குச் சாகுபடி செய்துகொள்ள ஊர்ப்பெரியவர்களால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

வரிசை எண்.	பெயர்கள்.	விஸ்தீரணம்.	சாகுபடி.
(1)	(2)	(3)	(4)
		ஏக்கர்.	
1	திரு. செல்வராஜ் த/பெ. காசிநாதன்.	0.50	புஞ்சைப் பயிர் சாகுபடி செய்து அறுவடை முடிந்து தற்போது வெறுமே உள்ளது.
2	திரு. பிச்சைப்பிள்ளை, த./பெ. முனையான்.	0.50	ஷை
3	திரு. காசிநாதன், த./பெ. பிச்சைக்காரன்,	0.50	ஷை

[திரு. எம். ஆனந்தன்] [1992 ஏப்ரல் 1

4	திரு, மரிக்கொழுந்து, த/பெ பிச்சைக்காரன்,	0,50	ஷெ
5	திரு, குப்புசாமி, த/பெ நயுத் தான்,	0,30	ஷெ
6	திரு, ரகுநாதன், த/பெ அப்பாவு,	0,30	ஷெ
7	திரு, தங்கவேல், த/பெ கண்ணன்	0,30	ஷெ
8	திரு, கலியன், த/பெ மூக்கன்	0,30	ஷெ

மேற்கண்ட நபர்கள் அனைவரும் ஆதிதிராவிடர்கள் ஆவர். அவர்களிடமிருந்து கோவிலுக்காக தலா ரூ, 50 வசூல் செய்து கொண்டு நிலம் அவர்களது சாகுபடிக்கு விடப்பட்டது, தற்போது மேற்கண்ட நபர்கள் பக்கத்துக் கிராமம் தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம், இராஜேந்திரப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவசங்கரன் என்ற ஆதிதிராவிடருக்கு இந்நிலத்தை விற்க விலை பேசியுள்ளனர். அனுபவ உரிமையை விற்க, மேற்கொள்ளப்படும் இம்முயற்சியை அங்கு வாழும் ஆதிதிராவிட சமூகத்தவர் எதிர்க்கின்றனர்.

3, அனுபவ உரிமை பெறப்பட்டுள்ள இடத்திற்கும், மயானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதனால், மயானத்திற்கு எவ்வித இடைஞ்சலும் இல்லை. மேலும், ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்கு நல்ல மண்சாலை வசதியுள்ளது. இருப்பினும், குளம் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித் தரும்படி ஆதிதிராவிடப் பொதுமக்கள் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அதன்படி குளம் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி அரியலூர் கோட்டாட்சியரையும், ஜெயங்கொண்டம் வட்டாட்சியரையும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளார்,

திரு, ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே. திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள், பெரியாத்துக் குறிச்சி என்ற கிராமம், ஜெயங்கொண்டம் வட்டத்தைச் சார்ந்தது. அதில் குறிப்பிட்டிருப்பது, தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளீர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த விவர அறிக்கையிலே, அங்கே இருக்கிற ஆதி திராவிட மக்களுடைய மயான இடத்தை, அதன் அருகாமையில் இருக்கிற பல இடங்களை, பலபேர்களுக்கு அந்த ஊர் சௌகரியத்தை

1992 ஏப்ரல் 1] [திரு. ஆர். தங்கராஜ்]

முன்னிட்டு, அங்கிருக்கிற கோயிலின் வருமானத்தை முன்னிட்டு, பட்டா வழங்கியிருக்கிறார்கள், அந்தப் பட்டா வாங்கியவர்கள் சிவசங்கரன் என்ற தனி நபருக்கு அந்த நிலத்தையெல்லாம் விற்று விட்டார்கள், அப்படி விற்றுவிட்ட ஒரு சூழ்நிலையில் அந்த மயான இடத்தை, சிவசங்கரன் என்பவர் ஆக்கிரமித்துக்கொண்டதால் அங்கே. நான் கடந்த வாரம் ஆண்டிமடம் ஒன்றியத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கே இருக்கிற மக்கள் எல்லாம், நீங்கள் எப்படியும் எங்கள் சுடுகாட்டு இடத்தை காப்பாற்றித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே அரசுக்குத் தெரிவித்துக் கொண்டு அந்த இடத்தை மீட்டு, ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம், ஆனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் கோருகிறபடி, அரியலூர் வட்டம் என்று சொன்னார்கள், அரியலூர் கோட்டாட்சியர் என்று என்னுடைய குறிப்பிலே இருக்கிறது, அவர் அதைப் படிப்பார் என்று கருதுகிறேன். எனவே, அந்தப் புறம்போக்கு இடத்தை, அரியலூர் கோட்டாட்சியருக்கும், ஜெயங்கொண்டம் வட்டாட்சியருக்கும், மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரியின் மூலமாக உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. ஆர், தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அங்கே ஆதிதிராவிட மக்களிடையே ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது, எனவே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பில், திருச்சிராப்பள்ளி மாவட்டம். அரியலூர் வட்டம். ஆண்டிமடம், பெரியாத்து குறிச்சி என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது, இனிமேல் இப்படிப்பட்ட குறிப்புகள் அனுப்புகிறபோது, சரியாகப் பார்த்து அனுப்பு மாறு உங்களுடைய துறையினை நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்,

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்தவாரம் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கே இருக்கிற ஆதிதிராவிட மக்கள் 'எங்களுடைய சுடுகாட்டினுடைய இடத்தை ஒரு தனி நபர் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார் ; எனவே, அதை நீங்கள் உடனடியாக மீட்டுத் தரவேண்டும்' என்று என்னிடம் ஒரு பெரிய கோரிக்கையை வைத்திருந்தார்கள், எனவே, அதை உடனடியாக மீட்டுத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும் என்பதற்காக, அரியலூர் கோட்டாட்சி அலுவலருக்கும், ஜெயங்கொண்டம் வட்டாட்சியருக்கும், மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரி மூலமாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-40

4. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி),

கோரிக்கை எண். 17-கல்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் மீது விவாதமும். வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 17—கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்,

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 1517,77,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1472. திரு. ஆர். சிங்காரம்,

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'தமிழகத்தில் அரசு நடுநிலைப்பள்ளிகளில் பணியாற்றும் பகுதிநேரக் கைத்தொழிலாசிரியர்களை அரசு ஆணை எண் 1367 நாள், 5—9—1986-ன்படி முழுநேர தொழிலாசிரியர்களாக்குவது குறித்து, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ, 15,17,77,87,000-ல் ரூ, 100 குறைக்க வேண்டும்,''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1547 திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம் கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பெண்கள் உயர்நிலைப்பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டு வருவதால். அரசுக்குச்